வகுப்பு : 12

தேர்வு எண்

முதல் திருப்புதல் தேர்வு 2019 -20

வணிகவியல்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் 90

பகுதி –I

20X1 = 20

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் சேர்த்து எழுதுக.

1. பரந்த அளவு வீச்செல்லையில் அதிகாரப்படி நிலை மட்டங்களின் அளவு ----
அ) அதிகம் ஆ) குறைவு இ) பன்மடங்கு ஈ) கூடுதல்

2. குறியிலக்கு மேலாண்மை செயற்முறையின் முதல் நிலை எது?
அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

3. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997

4. நிதிச் சந்தை வணிக நிறுவனங்களுக்கு ---- உதவுகிறது
அ) நிதிகளை திரட்டுவதற்கு ஆ) பணியாட்களை தேர்வு செய்வதற்கு
இ) விற்பனையை அதிகரிப்பதற்கு ஈ) நிதித் தேவையை குறைப்பதற்கு

5. அரசுப் பத்திரங்கள் ---- போன்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன.
அ) மத்திய அரசு ஆ) மாநில அரசு இ) பகுதி அரசு அமைப்புகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

6. இவற்றில் தவறான இணை யாது?
அ) காளை – விலையேற்றம்
ஆ) கரடி – விலை வீழ்ச்சி
இ) முடவாத்து – முனைம வேட்டையாளர்
ஈ) துணைத்தரகர் – உறுப்பினரின் முகவர்

7. மனித வளம் என்பது ஒரு ---- சொத்து
அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா இ) நிலையான நடப்பு

8. இவற்றில் பொருந்தாதது எது
அ) இடமாற்றம் ஆ) ஓய்வு பெற்ற ஊழியர்கள்
இ) வேலைவாய்ப்பு முகவர்கள் ஈ) ஆட்குறைப்பு

9. சரியான மனிதனை சரியான வேலையில் வைப்பது என்பது
அ) பயிற்சி ஆ) பணியமர்த்தல் இ) பதவி உயர்வு ஈ) மாற்றம்

10. குறிப்பிட்ட தலைப்பில் விரிவான கலந்துரையாடல் ----
அ) ஆய்வின் கீழ்பயிற்சி ஆ) பயிற்சியளிப்பு இ) மாநாடுகள் ஈ) ஆலோசனை

11. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப் கென்னடி இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

12. தேசிய நுகர்வோர் மறுவாழ்வுக் குழுவின் தலைவர் யார்?
அ) இந்திய உச்சநீதிமன்றத்தின் சேவை (அ) ஓய்வு பெற்ற நீதிபதி ஆ) பிரதம மந்திரி
இ) இந்தியத் தலைவர் ஈ) மேலே குறிப்பிடப்பட்டவை அல்ல

13. VUCA ----
அ) மதிப்பு நிச்சயயின்மை சிக்கலானது தெளிவில்லாதது இ) மாற்றம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது
ஆ) மதிப்பு தவிர்க்க இயலாதது நிறும
ஈ) மேற்கூறிய அனைத்தும்

14. தூய சில்லறை விற்பனையாளர் என அழைக்கப்படுபவர்
அ) சந்தை உருவாக்குநர்கள் ஆ) நடவடிக்கை தரகர்கள்
இ) வியாபாரிகள் ஈ) முகவர்கள்

15. பொருத்துக
1. ஸ்டார்ட்அப் இந்தியா – i) பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற உதவி
2. ஸ்டாண்ட் ஆப் இந்தியா – ii) மின்னணு முறை
3. டிஜிட்டல் இந்தியா – iii) தொடக்க நிலை தொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்
4. இந்தியாவில் தயாரிப்புத் திட்டம் – iv) பழங்குடியினர் (ம) தாழ்த்தப்பட்டவர்களுக்கு கடன் வசதி
அ) 1-(iv) 2(i) 3(ii) 4(iii) ஆ) 1(iii) 2(iv) 3(ii) 4(i)
இ) 1(iii) 2 (ii) 3(i) 4 (iv) ஈ) 1(iv) 2(iii) 3(ii) 4(i)

16. ஒப்பந்தத்திற்கு உறுதுணையாக இருக்கும் நிபந்தனை
அ) நம்புறுதி ஆ) நிபந்தனைகள் இ) உரிமை ஈ) உடன்பாடு

17. A : கம்பெனி என்ற வார்த்தை இலத்தின் மொழியிலிருந்து பெறப்பட்டதாகும்.
R : இது இணைந்து பணியாற்றுதலை குறிக்கும்.
அ) A மற்றும் R இரண்டும் சரி ஆ) A சரி R தவறு
இ) A விற்கு R சரியான விளக்கம் ஈ) A மற்றும் R இரண்டும் தவறு

18. மாற்றுச்சீட்டில் ஈடுபட்டள்ள தரப்பினர்கள் எத்தனை பேர்

அ) 2 ஆ) 6 இ) 3 ஈ) 4

19. ஒரு தனியார் கம்பெனியில் குறைந்தது ---- இயக்குனர்கள் இருக்க வேண்டும்

அ) 7 ஆ) 5 இ) 3 ஈ) 2

20. கூட்டுப்பங்கு தொழில் முனைவோரின் வேறுபெயர்

அ) அகத்தொழில் முனைவோர்கள் ஆ) தோற்றுவிப்பாளர்

இ) மேலாளர் ஈ) பங்குநர்

பகுதி - II

குறிப்பு : i) ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 7x2=14

ii) வினா எண்.30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21. மேலாண்மை என்றால் என்ன?
22. திட்டமிடுதல் என்றால் என்ன?
23. தலால் தெரு விளக்குக.
24. மனித வளத்தின் பொருள் தருக.
25. சந்தை என்றால் என்ன?
26. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளை தருக.
27. மேலெழுதுதல் வரையறு.
28. அகத் தொழில் முனைவோர் இலக்கணம் தருக.
29. முழுநேர இயக்குநர் என்பவர் யார்?
30. நிரந்தர கணக்கு எண் யாரால் வழங்கப்படுகிறது. அதன் பயன்கள் இரண்டு தருக.

பகுதி – III

குறிப்பு : i) ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 7x3=21

ii) வினா எண்.40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக.
32. வணிக இரசிதின் வகைகளை விவரி.
33. காளை மற்றும் கரடி விளக்குக.
34. ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில் உள்ள படிநிலைகளை கூறுக.
35. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை?
36. தனியார்மயமாக்கலின் முக்கிய கருத்துகளை விளக்குக.
37. விற்பனை உடன்பாடு என்றால் என்ன?
38. சிறப்புத் தீர்மானம் என்றால் என்ன?
39. தொழில் முனைவோர் வரைவிலக்கணம் தருக.
40. எவ்வித பின்புலமின்றி தன்னம்பிக்கை அடிப்படையில் தொழில் துவங்குபவர் யார்?

பகுதி – IV

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. அல்லது

ஆ) செவியின் அதிகாரங்களை விவரி.

42. அ) மூலதன சந்தையின் சிறப்பியல்புகளை விவாதிக்க. அல்லது

ஆ) பணியமர்த்தலின் கோட்பாடுகளை விளக்குக.

43. அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள். அல்லது

ஆ) சந்தையிடுகைக் கலவையின் கூறுகளை சுருக்கமாக விவரி.

44. அ) மேலாண்மையின் முக்கிய பணிகளை விவரி. அல்லது

ஆ) செல்தகு மேலெழுதுதலின் அடிப்படைக் கூறுகளை கூறுக.

45. அ) பணிவழி பயிற்சிக்கும் பணிவழியற்ற பயிற்சிக்கும் உள்ள வேறுபாடுகள் தருக. அல்லது

ஆ) தாராளமயமாக்கலின் நன்மைகளை விவரி.

46. அ) பங்குகளுக்கும் கடனிட்டு பத்திரங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை தருக. அல்லது

ஆ) மாநில ஆணையத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை விளக்குக.

47. அ) பலவகையான நிறுவ கூட்டங்களை விவரி. அல்லது

ஆ) நிறுமச் செயலரின் பணிகளை விளக்குக.